இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 08-07-2023

# ஊழல் அ.தி.மு.க.வைக் காப்பாற்றும் ஆளுநர்!

ஏதோ நேர்மையின் சிகரத்தைப் போல காட்டிக் கொண்டிருக்கும் ஆளுநர் ஆர்.என்.இரவி, ஊழல் அ.தி.மு.க.வைக் காப்பாற்றி வருவதை சட்ட அமைச்சர் ரகுபதி அம்பலப்படுத்தி இருக்கிறார்.

ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு, சட்டத்துறை அமைச்சர் ரகுபதி எழுதியுள்ள கடிதத்தில், ஊழல் வழக்குகளில் நீதிமன்றத்தில் விசாரணை தொடங்கிட இசைவு ஆணைக்காக அனுப்பப்பட்ட கோப்புகள் நீண்ட காலமாக நிலுவையில் இருப்பதையும், ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்கள் நிலுவையில் உள்ளதையும் குறிப்பிட்டு, விரைவான நடவடிக்கை எடுத்திடுமாறு வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்களான சி.விஜயபாஸ்கர், பி.வி. ரமணா ஆகியோர் குட்கா, மாவா விநியோகிப்பாளர்களிடமிருந்து சட்ட விரோதமாகப் பணம் பெற்ற குற்றச்சாட்டு தொடர்பாக உயர்நீதிமன்ற உத்தரவுப்படி கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்து விசாரித்து, இவர்கள் மீது நீதிமன்ற விசாரணை தொடங்குவதற்கு இசைவு ஆணையை சி.பி.ஐ. கோரியதையும் அமைச்சர் ரகுபதி குறிப்பிட்டுள்ளார்.

**மாநில அமைச்சரவையும் அந்த இசைவு ஆணை கோரும் சி.பி.ஐ.-யின் கோரிக்கையை ஆளுநர் அலுவலகத்துக்கு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் (12.9.2022) அனுப்பியதாகவும், ஆனால் இதுவரையில் இந்தக் கடிதம் தொடர்பாக எவ்வித பதிலும் கிடைக்கப் பெறாமல் முன்னெப்போதும் இல்லாத வகையில் தாமதப்படுவதால் இந்த வழக்கில் எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை என்றும் அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.**

இதேபோன்று, மேலும் இரண்டு நிகழ்வுகளில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், முன்னாள் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சராக இருந்த கே.சி.வீரமணி மற்றும் முன்னாள் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்த எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் மீது நீதிமன்ற விசாரணையைத் தொடங்கிட இசைவு ஆணை கோரியது. இந்தக் கோரிக்கைகளுக்கு மாநில அமைச்சரவை அனுமதி அளித்து அதற்கான கடிதங்கள், 12.09.2022 மற்றும் 15.05.2023 ஆகிய தேதிகளில் ஆளுநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. இந்தக் கோரிக்கைக் கடிதங்களும் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. முந்தைய அ.தி.மு.க. அமைச்சர்கள் மீதான எந்த ஊழல் குற்றச்சாட்டு வழக்குகளிலும் நீதிமன்ற விசாரணையைத் தொடங்கிட தேவையான இசைவு ஆணையை இதுவரை ஆளுநர் வழங்கவில்லை.

ஊழல் வழக்குகளில் இசைவு ஆணை நிலுவையில் இருப்பது தவிர, மாநிலச் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 13 மசோதாக்கள் ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளன என்றும், இவற்றில் இரண்டு மசோதாக்கள் 3 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளன என்றும் அமைச்சர் ரகுபதி கூறியுள்ளார். மேற்குறிப்பிட்டுள்ள முக்கியமான கோப்புகள் மற்றும் மசோதாக்கள் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி, இனியும் தாமதிக்காமல் ஊழல் வழக்குகளில் நீதிமன்ற விசாரணையைத் தொடங்கிட இசைவு ஆணையையும், மசோதாக்களுக்கு ஒப்புதலையும் வழங்குமாறு ஆளுநருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அமைச்சர் ரகுபதி வலியுறுத்தியுள்ளார்.

**இதன் மூலமாக ஊழல் அ.தி.மு.க.வினரைக் காப்பாற்றுவதற்கு ஆளுநர் ரவி துடித்ததை அறிய முடிகிறது. யாரைக் காப்பாற்றுகிறார் ஆளுநர்? 'குட்கா' வியாபாரிகளிடம் பணம் பெற்ற கூட்டத்தைக் காப்பாற்றுகிறார். குட்கா வியாபாரிகளிடம் வருமான வரித்துறை விசாரணை நடத்துகிறது. அப்போது தங்களது வியாபாரத்துக்குத் துணை நின்றவர்கள் அ.தி.மு.க. ஆட்சியில் யார் யார் என்பதை விலாவாரியாக அந்த வியாபாரிகள் சொல்கிறார்கள். அதற்கான ஆதாரங்களையும் கொடுக்கிறார்கள். 250 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு நடத்திய நிறுவனம் அது. அந்த நிறுவனத்தில் இருந்து 40 கோடி ரூபாய் வரை லஞ்சம் பெறப்பட்டுள்ளது அ.தி.மு.க. ஆட்சியில்.**

இதில் பல்வேறு மர்மங்கள் இருப்பதாகவும், குற்றவாளிகளை தப்பிக்க வைக்க முயற்சிகள் மேற்கொள்வதாகவும் பரவலாகப் பேசப்பட்ட நிலையில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் ஜெ.அன்பழகன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். சி.பி.ஐ. விசாரணை தேவை என்று அதில் முறையீடு வைத்திருந்தார். அன்றைய தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி முன்னிலையில் இந்த வழக்கு நடைபெற்றது. சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை என்று பழனிசாமி அரசு அப்போது பதில் மனு தாக்கல் செய்தது. ஆனால் மத்திய கலால் வரித்துறை தாக்கல் செய்த பதிலில், "டெல்லியில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஏராளமான குட்கா பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை விற்பதற்காக ரூ.55 கோடி வரை ஹவாலா முறையில் பணப்பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது" என்று கூறப்பட்டு இருந்தது. வருமான வரித்துறையும் இதனை வலிமைப் படுத்துவது மாதிரியான ஆதாரங்களைக் கொடுத்தது. தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, அப்துல் குத்தூஸ் அமர்வு, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது. (2018 ஏப்ரல் 26)

இதன் தொடர்ச்சியாக அ.தி.மு.க. காலத்து அமைச்சர்களான புதுக்கோட்டை விஜயபாஸ்கர், ரமணா ஆகியோர் மீது நீதிமன்ற விசாரணையைத் தொடங்குவதற்கு சி.பி.ஐ. அனுமதி கோருகிறது. மாநில அமைச்சரவையும் அனுமதி வழங்கி விட்டது. ஆனால் ஆளுநர் 12.9.2022 முதல் அனுமதி தராமல் இழுத்தடித்துக் கொண்டு இருக்கிறார்.

**இதில் தொடர்புடைய ஐ.பி.எஸ். அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அனுமதி தராமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு இழுத்தடித்து வருகிறது. அ.தி.மு.க. அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுக்க விடாமல் ஆளுநர் ரவி தடுத்து வருகிறார். இவர்கள்தான் ஊழல் ஒழிப்பைப் பற்றி வாய் கிழியப் பேசுகிறார்கள். கடிதம் அனுப்பிக் கொண்டு இருக்கிறார்கள்.**

**ஏற்கனவே ஆன்லைன் ரம்மிக்கு எதிரான சட்டத்தை கிடப்பில் போட்டு வைத்திருந்தார் ஆளுநர். இப்போது குட்கா மாமூல் பேர்வழிகளைக் காப்பாற்றுகிறார். இதையெல்லாம் மறைப்பதற்காகத்தான் சனாதன வேஷம் கட்டி ஆடுகிறார் ஆளுநர்.**



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற மானியக் கோரிக்கையில் 110 விதியின் கீழ் சென்னைக்கு அருகாமையில் குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதன் முன்னேற்றம் குறித்து, நேற்று முன்தினம் (06.07.2023) தலைமைச் செயலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், அரசு துறைகளின் உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா மற்றும் உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உயிரியல் பூங்கா மேம்பாட்டுக்கு - சன் டி.வி. ரூ.5 கோடி நிதியுதவி!

சென்னை, ஜூலை 8-

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா மற்றும் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலய மேம்பாட்டுக்காக சன் டி.வி. ரூ.5 கோடி நிதியுதவி அளித்துள்ளது.

முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் நினைவாக, ஏழை எளியோரின் கல்வி, மருத்துவ சிகிச்சை, சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத்திட்டங்களுக்காக சன் பவுண்டேஷன் மற்றும் சன் டி.வி. பல்வேறு அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா மற்றும் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் கூடுதல் வசதிகளை ஏற்படுத்தவும் சன் டி.வி. 5 கோடி ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது.

இதற்கான காசோலையை, தமிழ்நாடு முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயக்குநர் சீனிவாச ரெட்டி மற்றும் துணை இயக்குநர் காஞ்சனா, உதவி இயக்குநர் மணிகண்ட பிரபு ஆகியோரிடம் சன் டி.வி சார்பில் காவேரி கலாநிதி மாறன் வழங்கினார்.

இந்த நிதியைப் பயன்படுத்தி, அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பேட்டரி மூலம் இயங்கும் 10 வாகனங்கள், சிங்க உலா வாகனங்கள் வாங்கப்படும். அத்துடன், விலங்குகள் மற்றும் பறவைகள் இருப்பிடங்களைப் புதுப்பிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏழை எளியோருக்குக் கல்வி, அடிப்படைக் கட்டமைப்புகள் மற்றும் கற்றல் சூழலை மேம்படுத்துதல், தரமான இலவச சிகிச்சை, மகளிர் மற்றும் இளைஞர் நலன், கிராமப்புற மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்து வதற்காக சன் டிவியும் சன் பவுண்டேஷனும் தொடர்ந்து நிதி உதவி அளித்து வருகின்றன.

இத்திட்டங்களுக்காக சன் பவுண்டேஷன் மற்றும் சன் டி.வி. இணைந்து இதுவரை 185 கோடி ரூபாய்க்கும் அதிகமாக நிதி உதவி அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# நில வழக்கில் இருந்து - அமைச்சர் க.பொன்முடி விடுதலை!

## சென்னை சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு!

சென்னை, ஜூலை 8-

நில அபகரிப்பு வழக்கில் இருந்து அமைச்சர் க.பொன் முடி உள்ளிட்ட 10 பேரையும் விடுவித்து நீதிபதி உத்தரவிட்டார்.

தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி. கடந்த 1996ம் ஆண்டு முதல் 2001ம் ஆண்டு வரை போக்கு வரத்துத்துறை அமைச்சராக இருந்த போது சைதாப்பேட்டை ஸ்ரீநகர் வடக்கு காலனி பகுதியில் உள்ள அரசுக்கு சொந்தமான 3 ஆயிரத்து 630 சதுர அடி இடத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டதாக கடந்த 2003ம் ஆண்டு புகார் கூறப்பட்டது.

இதை எதிர்த்து லஞ்ச ஒழிப்புத்துறை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தது. விசாரணை முடிவில், பொன்முடியை வழக்கில் இருந்து விடுவித்து சிறப்பு கோர்ட்டு பிறப்



பித்த உத்தரவை உயர்நீதி மன்றம் 6.9.2017 அன்று ரத்து செய்தது. இதைத் தொடர்ந்து பொன்முடி உள்ளிட்ட 10 பேர் மீதான வழக்கு விசாரணை சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான குற்ற வழக்குகளை விசாரிக்கும் வழக்கு சிறப்பு கோர்ட்டில் நடந்தது.

இந்த வழக்கில் அனைத்துத் தரப்பு விசாரணையும் முடிவடைந்த நிலையில் ஜூலை 6 அன்று (வியாழக்கிழமை) தீர்ப்பு கூறப்படும் என நீதிபதி ஜெயவேல் அறிவித்திருந்தார். இந்த நிலையில், அமைச்சர் க.பொன்முடி உள்ளிட்டோர் மீதான வழக்கில் நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது. அதில், போதிய ஆவணங்கள் இல்லை எனக் கூறி நில அபகரிப்பு வழக்கில் இருந்து பொன்முடி விடுவிக்கப்பட்டார்.

அமைச்சர் உள்ளிட்ட 10 பேரையும் விடுவித்து நீதிபதி உத்தரவிட்டார்.


### அமைச்சர் துரைமுருகன் - டி.ஆர்.பாலு எம்.பி. முன்னிலை! திராவிட இயக்க எழுத்தாளர்

# க.திருநாவுக்கரசு புதல்வர் தி.சிற்றரசு - த.எழிலரசி மணவிழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 8-

திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு - தி.கோடீசுவரி ஆகியோரின் புதல்வர் தி.சிற்றரசுக்கும் - நினைவில் வாழும் தொழிற் சங்கத் தலைவர் வி.எம்.ஆர். சபாபதி - சாவித்திரி அம்மாள் ஆகியோரின் பெயர்த்தியும், நினைவில் வாழும் சி.தயாமூர்த்தி - இராணி ஆகியோரின் புதல்வியுமான



த.எழிலரசிக்கும் மணவிழா 9.7.2023 - ஞாயிறு காலை 9.30 மணியளவில் சென்னை - அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

மணவிழாவில் மு.சண்முகம் எம்.பி. வரவேற்புரையாற்றுகிறார். டி.கே.எஸ். இளங்கோவன் தொகுப்புரை வழங்குகிறார்.

இம்மணவிழாவை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, வைகோ எம்.பி., ஆ.இராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், சுப.வீரபாண்டியன், நக்கீரன் கோபால், விஜயா தாயன்பன், கி.நடராசன், நே.சிற்றரசு உள்ளிட்ட கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழத்துகின்றனர்.

திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு நன்றி கூறுகிறார்.

இம்மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி 9.7.2023 - ஞாயிறு மாலை 6.30 மணியளவில் திரைப்பட இசையமைப்பாளர் கலைமாமணி தாயன்பன் வழங்கும் பல்லவி குழுவினரின் மெல்லிசையுடன் நடைபெறுகிறது.

### அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - பி.கே.சேகர்பாபு - நே.சிற்றரசு எம்.சி. பங்கேற்பு!

# சென்னை மேற்கு மாவட்டம் சார்பில் மாபெரும் மின்னொளி கால்பந்தாட்டப் போட்டி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைக்கிறார்! தயாநிதி மாறன் எம்.பி. அறிவிப்பு!

சென்னை, ஜூலை 8-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தி.மு.கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க இணைந்து நடத்தும் 32 கல்லூரி மாணவ, மாணவியர் பங்கேற்கும் மாபெரும் மின்னொளி கால்பந்தாட்ட போட்டி ஜூலை 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் சென்னை ராயப்பேட்டையில் அமைந்துள்ள புதுக்கல்லூரி மைதானத்தில் நடக்கவிருக்கிறது.

இதன் துவக்க விழா நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறவிருக்கின்றது. இப்போட்டியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து, விழா பேருரையாற்றவிருக்கின்றார்.

இவ்விழாவிற்கு கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் தலைமை வகிக்கிறார். மாவட்ட கழகத்தின் செயலாளரும், பெருநகர மாநகராட்சி பணிகள் நிலைக்குழுவின் தலைவருமான நே.சிற்றரசு முன்னிலை வகிக்கின்றார்கள்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை, சென்னை பெருநகர மேம்பாட்டு குழுமத்தின் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றார்கள்.

இவ்விழாவில் மயிலை சட்டமன்ற உறுப்பினரும், சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாருமான த.வேலு, அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர். நா.எழிலன், சேப்பாக்கம் பகுதிக் கழக செயலாளரும், மண்டல குழு தலைவருமான எஸ். மதன் மோகன், திருவல்லிக்கேணி பகுதி கழகச் செயலாளரும், சென்னை பெருநகர மாநகராட்சி ஆளுங்கட்சி துணைத்தலைவருமான ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், கழக சிறுபான்மை நலப்பிரிவின் தலைவர் டாக்டர். சுபேர்கான், மாமன்ற உறுப்பினர் திருமதி. ஈஸ்வரி வெங்கடேசன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநில துணை செயலாளர்கள் கௌதம் சிகாமணி, எம்.பி. எஸ்.ஆர். பார்த்திபன், எம்.பி. ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., வே.நம்பி, பைந்தமிழ் பாரி, சுரேஷ் ஜெ. மனோகர், வாசிம் முபாரக், செல்வி. நிவேதா ஜெசிகா, எஸ்.கார்த்திக் மற்றும் வே.கௌதமன் உள்ளிட்ட கழக முன்னணியினர் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்வில் விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநிலத் துணை செயலாளர் ஏ.ஆர்.வி. கோபால்ராம் வரவேற்புரையாற்றுகின்றார். வட்டக் கழகத்தின் செயலாளர் ஜி.வெங்கடேசன் நன்றியுரையாற்றுகின்றார்.



சென்னை – தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (06.07.2023) சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில் வருகிற ஆகஸ்ட் 03 முதல் ஆகஸ்ட் 13 வரை ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் – 2023 போட்டியினை சிறப்பாக நடத்துவதற்காக தமிழ்நாடு அரசின் பங்களிப்பாக ரூபாய் 12 கோடிக்கான காசோலையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஹாக்கி இந்தியா நிர்வாகிகளிடம் வழங்கினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா பொது செயலாளர் போலாநாத் சிங், தலைமை நிர்வாக அலுவலர் திருமதி எலினா நார்மன், நிர்வாக இயக்குநர் ஸ்ரீவஸ்தவா, பொருளாளர் சேகர் மனோகரன் ஆகியோர் உள்ளனர்.